**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**தே.செ.வெ.எண். 43** **நாள்: 30.03.2026**

**இந்திய தேர்தல் ஆணையத்தின் Suvidha செயலி மூலம் இன்று (30.03.2026) வரை 1157 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. இவற்றில் 724 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு அனுமதி வழங்கப்பட்டுள்ளன என சென்னை மாவட்ட தேர்தல் அலுவலர்/பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல்-2026னை முன்னிட்டு, சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளில் வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகள் பொதுக்கூட்டங்கள், பேரணி மற்றும் தெருமுனைக் கூட்ட பிராச்சாரம் நடத்துதல், வாகனங்கள் மற்றும் ஒலிபெருக்கி பயன்படுத்துதல், தற்காலிகக் கட்சி அலுவலகம் அமைத்தல் உள்ளிட்டவற்றிற்கு இந்திய தேர்தல் ஆணையத்தின் Suvidha என்ற செயலி மூலம் நிகழ்வு தொடங்குவதற்கு 48 மணிநேரத்திற்கு முன்பாக சம்பந்தப்பட்ட தேர்தல் நடத்தும் அலுவலரிடம் (Returning Officers) விண்ணப்பித்து அனுமதி பெறவேண்டும்.

இந்த Suvidha செயலி மூலம் இன்று (30.03.2026) காலை 11 மணி நிலவரப்படி, 1157 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. இவற்றில் 724 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு அனுமதி வழங்கப்பட்டுள்ளன. 219 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. மேலும், 214 விண்ணப்பங்கள் பரிசீலனையில் உள்ளது.

வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகள் இந்த செயலியின் மூலம் வீடுவீடாகச் சென்று பிரச்சாரம் மேற்கொள்ளுதல் (Door to door Canvass), ஹெலிகாப்டர் மற்றும் ஹெலிபாட் (Helicopter and Helipad) பயன்பாடு, தற்காலிகக் கட்சி அலுவலகம் அமைத்தல் (Temporary Party Office), ஒலிபெருக்கியுடன் கூட்டம் நடத்துதல் (Hold Meeting and Loud Speaker), ஒலிபெருக்கியின்றி கூட்டம் நடத்துதல் (Hold Meeting without Loud Speaker), ஒலிபெருக்கியுடன் தெருமுனைக் கூட்டம் நடத்துதல் (Street Corner Meeting and Loud Speaker), ஒலிபெருக்கியுடன் ஊர்வலம் நடத்துதல் (Take out Procession and Loud Speaker), பேரணி நடத்துதல் (Rally), சாலைக் காட்சி (Road Show)

மேற்கொள்ளுதல், விளம்பரப் பதாகைகள் மற்றும் கொடிகள் (Display Banner and Flags), சுவரொட்டிகள், விளம்பரப் பலகைகள் மற்றும் கம்பத்துடன் கூடிய விளம்பரப் பலகைகள் (Poster, Hoarding and Unipole), வாகனங்கள் அனுமதி (Vehicle Permission), உள் மாவட்டத்திற்குள் வாகனங்கள் அனுமதி (Vehicle Permit (intra District)), ஒலிபெருக்கியுடன் வாகன அனுமதி (Vehicle with Loudspeaker Permit), நட்சத்திரப் பேச்சாளர்கள் மற்றும் கட்சிப் பொறுப்பாளர்களுக்கு வாகன அனுமதி (Star campaigners and Party office bearers) உள்ளிட்டவற்றிற்கு விண்ணப்பிக்க வேண்டும்.

மேலும், சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளில் தேர்தல் தொடர்பான கூட்டங்கள் மற்றும் தெருமுனைக் கூட்டங்கள் நடத்துவதற்கு சென்னை பெருநகர காவல் ஆணையாளர் அவர்களால் ஏற்ற இடங்களாக தேர்தல் தொடர்பான பொதுக் கூட்டங்கள் நடத்துவதற்கு 112 இடங்கள், தெருமுனைக் கூட்டங்கள் நடத்துவதற்கு 179 இடங்கள் என 291 இடங்கள் பரிந்துரை செய்யப்பட்டு, சென்னை மாவட்ட தேர்தல் அலுவலர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட 291 இடங்களில் மட்டுமே அனுமதி வழங்கப்படும். இதர இடங்களில் கூட்டங்கள் நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.

எனவே, தேர்தல் விதிகளின்படி Suvidha செயலி மூலம் 48 மணிநேரத்திற்கு முன்னதாக விண்ணப்பங்களை அளித்து, சம்பந்தப்பட்ட தேர்தல் நடத்தும் அலுவலரிடமிருந்து அனுமதி பெற்று தேர்தல் நடத்தை விதிகளை தவறாமல் பின்பற்றுமாறு சென்னை மாவட்ட தேர்தல் அலுவலர்/பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**